விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மார்கழி 4 ராபி ஆகி 6 இதழ் 312

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 19-12-1985


## ஒட்டுசுட்டான் சம்பவம்: வயோதிப மாது பலி!

[ஒட்டுசுட்டான்[

ஒட்டுசுட்டான் பகுதியில் ஆயுதப்படையினருக்கும் தமிழ்த் தீவிரவாதிகளுக்குமிடையே இடம் பெற்ற மோதலின்போது, ஒரு வயோதிபமாது துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகள் புனர்வாழ்வு: நெதர்லாந்து அரசு குழு 21ல் வடக்கே வருகிறது

(வவனியா)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இடம் பற்ற வன்முறைச்சம்பவங்களால் பாதிக்கப்பட்டு அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் தமிழ் மக்களின் எதிர்கால புனர்வாழ்வு குறித்து ஆய்வொன்றை மேற்கொள்ளும் முகமாக, நெதர்

[5-ம் பக்கம் டார்க்க]

# இனப்பிரச்னை பேச்சுவார்த்தை தமிழர் கூட்டணிக்கு அரசு அழைப்பு?

# ரொமேஷ் மீண்டும் விஜயம்

(நமது சிறப்பு நிருபர்)

இனப்பிரச்னை சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளதா?

நம்பகமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளியான தகவல்கள்; மேற்படி செய்தியை ஊர்ஜிதம் செய்துள்ளதுடன்; இப்பேச்சுவார்த்தைகள் கொழும்பில் நடைபெறவேண்டுமென்பதையே அரசு விரும்புவதாகவும் தெரிவித்துள்ளன.

இதே நேரத்தில் புதுடில்லியில் நேற்று வெளியான செய்திகளின்படி: இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி எந்த நேரத்திலும் இலங்கை வரலாம் என்றும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய யோசனைகள் பற்றி இலங்கை அரசின் முடிவான கருத்தை அறிய அவர் விரும்புவதாகவும் தெரியவந்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

## "கொத்மலை பகுதியில் சிங்களவர் சிறுபான்மை!" சபையில் ஆனந்த தஸநாயக்கா

[கொழும்பு]

"தோட்டப்பகுதிகளிலுள்ள சிங்கள மக்களுக்காகக் காணி பெற்றுக்கொடுப்பதற்கு நான் சிறை செல்லவும் தயார்! இது வாழ்வுக்கும், சாவுக்கும் இடையிலான போராட்டம்!"

கொத்மலை எம். பி. திரு. ஆனந்த தஸநாயக்கா நேற்றுப் பாராளுமன்றத்தில் இவ்வாறு சூளுரைத்தார்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்தில் அவர் மேலும் பேசுகையில்: "துட்டகைமுனு இருந்து போராடிய கொத்மலைப் பகுதியில் இன்று

(5-ம் பக்கம் பார்க்க)

## "வடக்கு கிழக்கில் சிங்களவர் குடியேறவேண்டும்" -அனில்முனசிங்க

[கொழும்பு]

",நாட்டின் வெறுங் காணிகள், வடக்குக் கிழக்குப் பகுதிகளிலேயே உள்ளன. நாளுக்கு நாள் சிங்களவரின் சனத்தொகை அதிகரிக்கின்றது. இவர்களை வடக்குக்- கிழக்குப் பகுதிகளில் குடியேற்ற வேண்டும். தமிழ்ப் பிரதேசமென்று கூறி இவர்களைக் கைவிடமுடியாது" என்று மத்துகம எம் பி திரு அனில் முனசிங்க நேற்றுப் பாராளுமன்றத்தில், காணி, காணி அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்தில் பேசுகையில் கூறினர். [ய-பி]

## கரையோரப் பகுதியில் தாக்குதல் முயற்சி? லெப். ஜெனரல் தகவல்

(கொழும்பு)

"புத்தளம்-சிலாபம் பகுதிகளில், விசேஷமாக கரையோரப் பகுதிகளில் இருந்து திடீர்த் தாக்குதல்களை மேற்கொண்டு நாட்டைப் பிளவுபடுத்த பயங்கரவாதிகள் முயற்சிகளை மேற்கொள்வதாக அரசாங்க பாதுகாப்புச் சேவைக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன" என்று, முப்படைகளின் ஒன்றிணைந்த (நடவடிக்கை) தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்க வெளியிட்டுள்ள பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்

(5-ம் பக்கம் பார்க்க)

## சனத்தொகை அடிப்படையில் காணிப்பங்கீடு? சபையில் தினேஷ் அச்சம்

(பி. ராஜரட்ணம்)

"வடக்கு - கிழக்குப் பகுதிகளில்உள்ளகாணிகள், மாவட்டங்களின் தற்போதைய சனத்தொகை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட இருக்கிறதா? இந்த முடிவு பாரதூரமான விளைவையே ஏற்படுத்தும்" என்று மகரகம எம்.பி. திரு. தினேஷ் குணவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் கூறினர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சுக்கான நிதிஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் பேசுகையில் அவர் மேற்படி அச்சம் தெரிவித்தார்.

"நாட்டில் வடக்கு-கிழக்குப் பகுதிகளிலேயே அபிவிருத்தி செய்யப்படாத, எதிர் காலத்தில் மக்கள் குடியேறக்கூடிய

(11-ம் பக்கம் பார்க்க)

## பெரியகுளத்தில் முகாம் முற்றுகை

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் கடத்தப்பட்டவர்களைக் கண்டுபிடிக்கும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த ஆயுதப் படையினர் 'தமிழீழ மக்கள் விடுதலைக்கழக (புளட்) முகாம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை இத்தடுதல் வேட்டையில்ஆயுதப்படையினர் ஈடுபட்டிருந்தனர். வவனியாப்பகுதியிலுள்ள பெரியகுளம் என்னும் இடத்தில் இந்த முகாம் இருந்ததாம்.

இத்தேடுதலின்போது மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட முகாமிலிருந்து இரு ஷொட்கன், இருகைக்குண்டுகள், உடுபிடவைகள், பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

[ய-மா]

## பொன்னாலை சம்பவம் "சுட்டுத்தள்ளுவோம் என்று பயமுறுத்தினர்!" காயமடைந்தவர்கள் தரும் தகவல்

[யாழ்ப்பாணம்]

"கொட்டியாவுக்கு உதவி செய்யும் உங்களைச் சுட்டுத் தள்ளுவோம்" என்று வ.பி. போ. ச. பஸ்ஸில் வந்து பொன்னாலைச் சந்தியில் இறங்கிச் சுட்ட சீருடையினரில் ஒருவர் கூறினர்"

பொன்னாலைச் சம்பவத்தில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள சுழிபுரத்தைக் சேர்ந்த மினி பஸ்சாரதி பி. சேனாதிராசா [45 வயது] மேற்கண்டவாறு கூறினர்.

தலையிலும், வலதுகை, வலது வயிறு, வலது தொடையில் இவர் துப்பாக்கிக் குண்டுகளினால் காயமடைந்தார். இவரது வலது பக்க நெஞ்சில் பரவலாகச் சிறுசிறு எரிகாயங்கள்காணப்பட்டன. இவருக்கு நேற்றுமுன்தினம் அவசர சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. உள்பாய்ந்த குண்டுகள் வெளியேறிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவதினம் காலை ஆறரை மணிக்கு காரைநகர் செல்வதற்காக மூளாயிலிருந்து புறப்

(5-ம்பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் மேலும் மூவர் அனுமதி

[யாழ்ப்பாணம்]

பொன்னாலையில் இடம் பெற்ற ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த மேலும் மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுக்காலை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்த இன்னொருவர் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லையாம்.

சுழிபுரத்தைச் சேர்ந்தவர்களான வி. அம்பலவாணர்

(5-ம் பக்கம் பார்க்க)

## இவ்வாரம் ரயில் ஓடும்?

[கொழும்பு]

யாழ்ப்பாணத்துக்கானரயில் சேவை மீண்டும் இவ்வாரம் ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மூன்றும் வகுப்புக்கான ரயில் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் செய்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. [பி]

## கம்பங்களில் ஏழுபேர் சுன்னகத்தில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

சுன்னகம் மின்சார நிலையத்திலுள்ள உழவு யந்திரம் ஒன்றை இயக்கம் ஒன்றின் பெயரைச் சொல்லி கொள்ளை அடிக்க முயன்ற ஏழு நபர்கள் வசமாக மாட்டிக்கொண்டார்கள்.

நேற்றுமுன் தினமிரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

குறிப்பிட்ட ஏழு நபர்களும் அப்பகுதியில் உள்ளவர்களால் தாக்கப்பட்டதுடன் நேற்றுப் பகல் பொதுமக்கள் பார்வைக்கு கம்பங்களில் கட்டி வைக்கப்பட்டிருந்தனராம்.

[மா]

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Bairaha Farms புரொயிலர் குஞ்சுகள், Nel Farm சேவற் குஞ்சுகள் 24ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக் கப்படும். பதிவு செய்க, சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [2476]

---

## தேவை

கிறைண்டர் மில்லில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ஆள் தேவை. தொடர்பு கொள்ளவும்: Trufood Grinders, 41, Kanthappasegaram Lane, (ஹரன் சினிமா அருகாமையில்), யாழ்ப்பாணம். [2469]

---

ஆங்கிலத் தட்டச்சு அனுபவமுள்ள லிகிதர் உடனே தேவை. ஆண், பெண் இருபாலாரும் 30-12-85க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2447, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [2447]

---

வீடியோ கமரா படம் பிடிப்பதற்கு ஒரு வருட அனுபவமுள்ள ஆள் தேவை. மாதாந்தச் சம்பளம் கொடுக்கப்படும். 25-12-85க்கு முன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்: றீகல் சவுன்ஸ், 13/1, ஈச்சமோட்டை, கடற்கரைவீதி, யாழ்ப்பாணம். [2433]

---

## தவறிவிட்டது

இல. 209895 நாகலிங்கம் வயித்திலிங்கம் என்பவருடைய லொறி லைசென்ஸ் 16-12-85ல் டச் ரோட், தெல்லிப்பழையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். அம்பாள் அரிசி ஆலை, டச் ரோட், தெல்லிப்பழை. [2457]

---

சின்னையா தேவராசா அராலி தெற்கு, வட்டுக்கோட்டை என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [2468]

---

சிவக்கொழுந்து சேதுநாதன் சிறைச்சாலை விடுதி, பண்ணை, யாழ்ப்பாணம் என்பவரின் அடையாள அட்டை இல: 332990217 V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [2458]

---

இல. 691540731 V கே. ஸ்கந்தராஜா, கல்வியங்காடு என்பவருடைய அடையாள அட்டை 15-12-85 ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்குறிப்பிட்டவிலாசத்திற்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கே. ஸ்கந்தராஜா, C/o V. T. கந்தசாமி, புதிய செம்மணிவீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (2470)

---

### தவறி விட்டது

கிருஷ்ணன் சின்னத்தம்பி, திருமதி துரைராணி தம்பிராசா என்பவர்களுடைய அடையாள அட்டைகள் சந்நிதிகோவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். கிருஷ்ணன் சின்னத்தம்பி, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை. 2471

---

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வட்டுக்கோட்டை மேற்கு இராமலிங்கம் கைம்பெண் தங்கம்மாவின் மரண சாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

— மரணமெய்தியவர்,

தவராஜா சண்முகராசா வட்டுக்கோட்டை மேற்கு அவரின் அற்றோனித்தத் துவகாரன் திருச்செல்வம் விநயகரட்ணம். வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை.

— மனுதார்,

வழ. இல. ரி/3886

எதிராக

1. நவராஜா பத்மராஜா
2. நவராஜா யோகராசா
3. நவராஜா இளையராசா
4. சுப்பிரமணியம் பத்மநாதன்
5. பெண் பத்மலீலா

எல்லோரும் வட்டுக்கோட்டைமேற்கு, வட்டுக்கோட்டை.

— பிரதிவாதிகள்,

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு இந்நீதிமன்றத்தில் மேற் சொல்லப்பட்ட காலஞ் சென்றவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு மார்கழி மாதம் 20ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளை ஆக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
**கனகேந்திரன்,**
பதிவாளருக்காக,

வரைந்தவர்:
**ச. அபிமன்னசிங்கம்,**
மனுதாரின் சட்டத்தரணி. (2424)

---

## வாடகைக்கு

ஒரு அறையும், குசினியும் வாடகைக்குண்டு. தொடர்பு: இல. 12 A, 5-ம் கு.ரோட், யாழ்ப்பாணம். [2455]

---

### TO LEASE

Furnished office, Employees, staff required for building contracts Construction Industry available for lease. Walking distance from Jaffna Bus Stand. Apply: Advt. No. 2466, C/o Eelanadn, Jaffna. [2466]

---

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி மரணித்த உடுவில் சுன்னுகத்தைச் சேர்ந்த சிவகணேசமூர்த்தி பெண் தனலட்சுமியின் மரணச் சொத்து சம்பந்தப்பட்ட விடயத்தில்.

(மரணித்தவர்)

மரணச்சொத்து தத்துவ வழக்கு } இல. ரி/3895

பொன்னையா சிவகணேசமூர்த்தி, உடுவில், சுன்னுகம்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனமில்லாத் தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப் பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9 ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

வரைவு:
சி. வசந்தசேனன்,
சட்டத்தரணி,
1-11-85.

காலம் 7-02-1986 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக்கட்டளைப்படி,
**கனகேந்திரன்,**
பதிவாளர்க்காக. (2238)

---


கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ



விற்பனையாகிறது!
பல வண்ணப்படங்களுடன் கூடிய அட்டையுடன்
ஆனந்தா
**திருக்குறட் கலண்டர்**
விற்பனையாளர்கள்
தயவுசெய்து நேரில் தொடர்புகொள்க:
**ஆனந்தா புத்தகசாலை,**
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(2462) தொலைபேசி: 22348


---


## அலங்கார விளம்பர சேவை

விளம்பரங்களை லாபகரமாகவும் சிறிய விளம்பரங்களாகவும் பிரசுரிப்பதற்கு வசதியாக

### அலங்கார சிறு விளம்பர சேவை

ஒன்றை ஆரம்பித்துள்ளோம். இச்சேவை ஒரு கூட்டு விளம்பரத்தொகுப்பாகும். இவ்விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு

**ஜோ. எக்கட்டன்,**
**செனித் மார்க்கட்டிங் அன் அட்வட்டைசிங் சிஸ்டம்ஸ்,**
**139, கடற்கரை வீதி - யாழ்ப்பாணம்.**

ஆகியோரை நியமித்துள்ளோம். மேலும் தகவல்களைப் பெறுவதற்கு எம்முடன் தாங்கள் தொடர்பு கொள்ளலாம்.

**தொலைபேசி: 24126**

உங்கள் விளம்பரங்களை கொடுத்துதவுவதற்கு வசதியாக மேற்படி முகவர் உங்களுடன் நேரடித் தொடர்பு கொள்வார்.

**நிர்வாகி,**
**'ஈழநாடு' - யாழ்ப்பாணம்.**
[2450]


---

(பொலிஸ் சார்ஜன்ட் P. S. 6666)
### திரு. வைரமுத்து சுப்பிரமணியம்
அவர்களின்



### 1-வது வருட நினைவஞ்சலி

**ஆண்டவன் படைப்பு:**
**21-1-1936**

**அநியாய அழிப்பு:**
**30-12-1984**

அன்புடனே எம்மைப்பேணி அரவணைத்த உன்கரங்கள்
மரணத்தைத் தேடி மிக விரைவுடனே நீண்டதுவோ
தருணத்தைப் பார்த்திருந்த மாபாவி துரோகிகள்
மனதினிலே இரக்கமின்றி மலையதனைச் சரித்தனரோ
ஐயகோ இக்கொடுமை எப்படித்தான் நேர்ந்ததுவோ
குற்றமென்ன செய்திட்டாய் கூறுமையா எங்களுக்கு
அறியும்வரை எம்முள்ளம் ஆறுது! ஆறுது!!
தேடிநின்று வேண்டுகின்றோம் உத்தமன் ஆத்ம சாந்திக்காய்.

**மனைவி, மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள்.**
பூதராயர் ஒழுங்கை, பருத்தித்துறை. (2427)

---

## 1-வது வருட நினைவஞ்சலி
### அமரர் திரு. ஆறுமுகம் நாகேந்திரம்
(வயாவிளான்)



| அன்னைமடியில்: | இறைவனடியில்: | திதி: |
|---|---|---|
| 10-02-1919 | 29-12-1984 | 19-12-1985 |

எங்கள் குடும்பத்தின் அன்புத்தீபமே! ஒளிவிளக்காயும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து எங்களை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட தெய்வமே, இன்றுடன் ஓராண்டுகாலம் பூர்த்தியாகிவிட்ட போதிலும் எங்கள் இதயங்களில் என்றும் அணையாத தீபமாக பிரகாசிக்கின்றீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
**மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரன், மற்றும் உறவினர்கள்.**

'ராணி அகம்', பிள்ளையார் கோவிலடி,
வயாவிளான். [2451]

## இந்தியா --- டாகிஸ்தான்

# அணுசக்தி நிலையங்களை பரஸ்பரம் 'தாக்கமாட்டா!

புதுடில்லி. டிச-18

**இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் பரஸ்பரம் தமது அணுசக்தி நிலையங்களைத் தாக்குவதில்லை என்று முடிவுசெய்துள்ளன. இம்முடிவைப் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஸியாவுல் ஹக் நேற்றுப் புதுடில்லியில் வைத்து வெளியிட்டார்.**

ஜெனரல் ஹக் நேற்று இந்தியாவில் ஆறு மணி நேரம் ஒரு குறுகிய விஜயமொன்றை மேற்கொண்டார். இவ்விஜயத்தின் இறுதியில் புதுடில்லி விமான நிலயத்தில் அவர் பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை நடத்தினுர். அப்போதே மேற்கணட தகவலை அவர் வெளியிட்டார். இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டார்.

அணுசக்தி ஆக்கத்துறையில் இரு நாடுகளும் ஒன்றையொன்று தாக்கமாட்டாதென முடிவுசெய்திருப்பதாகத் தெரிவித்த ஜெனரல் ஹக், பொருளாதாரமற்றும் போர்விலக்கல் நடவடிக்கைகளில் இந்தியா, பாகிஸ்தான் கூடுதல் ஒத்துழைப்பைக் கொண்டிருக்கும் என்று தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அடுத்த ஆண்டு முறபகுதியில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் ஜெனரல் ஹக் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கிடையிலும் கூடுதல் பொருளாதார ஒத்துழைப்புக் குறித்துக் கூட்டுக் கமிஷன்களின் நடவடிக்கைகள் நெருக்கமாக்கப்படும். இத்துடன் போர் விலக்கல் குறித்தும் இரு நாடுகளும் ஆக்கபூர்வமான யோசனைகளை ஆராயும் என்று ஜெனரல் ஹக், பிரதமர் ராஜீவ் ஆகியோர் நம்பிக்கை தெரிவித்தனர். [கி]

## புதிய போதை வஸ்து ஆராய்ச்சியாளர் கைது!

(வாஷிங்டன்)

மிகவும் சக்தி வாய்ந்த ஹீரோயின் போதை வஸ்துக் கலவை ஒன்றைக் கண்டுபிடித்தது தொடர்பாக இரசாயன ஆராய்ச்சியாளர் ஒருவர் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் முக்கிய ஆராய்ச்சிக்கூடம் ஒன்றில் பணியாற்றும் இவர் கண்டுபிடித்த கலவையின் ஒரு அவுன்ஸானது, சுத்தமான ஹீரோயினின் 62 இருத்தல் போதைச்சக்திக்குச் சமமானதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவில் மட்டும் இப்புதிய போதைவஸ்தை உட்கொண்ட சுமார் நூறுபேர் மரணித்துள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இரசாயன ஆராச்சியாளர் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளார். (செ)

## உலக சுகாதார ஸ்தாபனம்:

# சர்வதேச எய்ட்ஸ் எதிர்ப்பு பிரசாரம்!

ஜெனீவா, டிச-18

உலக சுகாதார ஸ்தாபனம் 'எயிட்ஸ்' நோய் எதிர்ப்புப் பிரசாரம் ஒன்றைச் சர்வதேச ரீதியில் ஆரம்பித்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை இந்த ஸ்தாபனத்தின் தொண்டர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

தன்னினச் சேர்க்கை, போதைவஸ்து உபயோகிப்புப் போன்றவற்றினுல் பரவும் இந்நோயினுல் இதுவரை சுமார் 20.000 பேர் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று இத்தாபன அறிக்கையொன்று தெரிவித்தது. எனினும், யூகோஸ்லவியா, சீன ஆகிய நாடுகளில் தலா ஒருவருக்கே இந்நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நோய்க் கிருமிகள் உடலிலுள்ள இயற்கை நோய் எதிர்ப்புச் சக்தியை அழித்துவிடுகின்றன. இதனுல் சிறு நோய்களுக்குக்கூடத் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் நோயாளி மரணமடைகிறுர். [செ]

## இரத்தக்களரியை நீக்க

# உகண்டாவில் யுத்தநிறுத்தம்

கம்பாலா, டிச-18

உகண்டாவில் இராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி ஜனநாயகத் தேர்தல்களை நடைபெறச் செய்யும் வகையில் போர்நிறுத்த உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்பாடு உகண்டா இராணுவ ஆட்சியாளரிடையேயும், இந்நாட்டின் முக்கிய கிளர்ச்சியாளர்களான என். ஆர். ஏ. பிரிவினர்களுக்குமிடையே எட்டப்பட்டுள்ளது.

புதிய போர் நிறுத்த உடன்பாட்டின்கீழ் உகண்டாவின் தலைநகரான கம்பாலாவில் இராணுவ ஆட்பலத்தைக் குறைப்பது,

முன்னுள் ஜனுதிபதி இடிஅமினின் இராணுவத்தினரைத் தண்டிப்பது,

உகண்டாவின் இராணுவ ஆட்சியில் என். ஆர். ஏ. பிரிவினருக்கும் சமவாய்ப்புக்களை அளிப்பது போன்ற நிபந்தனைகள் ஏற்கப்பட்டுள்ளன.

இப்புதிய நிபந்தனைகளின் கீழ் ஏற்படவுள்ள போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க கென்யா, தன்ஸானியா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த யுத்தநிறுத்த உடன்பாடு உகண்டாவில் இராணுவக் குழுக்கள் மற்றும் என். ஆர். ஏ. தீவிரவாதிகளுக்கிடையில் நிலவும் மோதல்களைத் தவிர்த்து, நீண்டகால இரத்தக்களரியை முடிவுக்குக் கொண்டுவர உதவுமென்றும், உகண்டாவில் ஜனநாயக மக்கள் ஆட்சி ஏற்படுவதற்கு வழிகோலுமெனவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

உசண்டா இராணுவ ஆட்சியாளர் டிட்டோ ஒக்கேலோ, என். ஆர். ஏ தலைவர் மசாலேனே ஆகியோரே இப்புதிய உடன்பாட்டில் கைச்சாத்திட்ட முக்கிய பிரமுகர்களாவர். [கி]

## கசிப்பு உற்பத்தி இல்லை

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பகுதியில் கசிப்பு தயாரிப்பு, கசிப்பு விற்பனை முற்றுக தடை செய்யப்பட்டுள்ளது.

இளைஞர் குழுவொன்று சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று குறிப்பிட்ட திகதிக்குப்பின்னர் சசிப்பு தயாரிக்கவோ, விற்கவோ கூடாது என்று எச்சரித்ததைத் தொடர்ந்து கசிப்பு உற்பத்தியும், விற்னையும் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை [illegible] மேற்படி நிலைய மண்டபத்தில், உப-தலைவர் திரு. சி. பி. சவுந்திரநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இம்முறை நடைபெறவிருக்கும் இப்பொதுக் கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள்பற்றி ஆராயப்படவிருப்பதாக காரியதரிசி திரு. அ. தேவராசா தெரிவித்தார். (வி)

## மலேசியா மறுப்பு

கொழும்பு'

இலங்கையில் தமிழ் பகுதிகள் மீது இலங்கை பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் விமானத் தாக்குதலின் போது தாக்குதல் நடத்தும் அந்த விமானங்களை மலேசியவைச்சேர்ந்தவர்கள் ஓட்டுகிருர்கள் என்ற இலங்கைத் தமிழ் போராளிகளின் குற்றச்சாட்டை சென்னையிலுள்ள மலேசியத் தூதரகம் மறுத்துள்ளது.

இதுதொடர்பாக சென்னையிலுள்ள மலேசியத் தூதுவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; ''இந்த விமானங்களை மலேசியாக்காரர்கள் ஓட்டுகிருர்கள் என்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கூற்று தவறுனதாகும். இந்த விமானங்களை மலேசியாக்கரர் எவரும் ஓட்டிச்செல்வதில்லை'' என்றும் கூறப்பட்டுள்ளது.

## கம்பியூட்டர் மையம்!

[சென்னை]

தமிழ் நாட்டிலுள்ள தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் சுமார் 14 லட்சம் ரூபா செலவில் ஒரு கம்பியூட்டர் நிலையம் அமைக்சப்படவுள்ளது.

இந்தியாவின் ஏனைய பிராந்திய மொழிகளிலுள்ள நூல்களை மொழிபெயர்க்க இந்த நிலையம் பயன்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகமொன்றில் கம்பியூட்டர் மையமொன்று அமைக்சப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

## இலங்கை அரசுக்கு ஆயுதம்:

## புதுடில்லியில் 'ஸியா' விளக்கம்

(புதுடில்லி)

இலங்கையில் தனிநாடுகோரிப் போராடும் தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு ஆயுதங்களை வழங்குவதாக தாம் இலங்கை அரசுக்கு உறுதி அளிக்கவில்லை என்று பாகிஸ்தான் ஜனுதிபதி ஜெனரல் ஸியா வுல் ஹக் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

''இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு ஆதரவாகவும், அந்த நாட்டில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுப்போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் பாகிஸ் ஆதரவு அளிக்கும் என்றுதான் கூறப்பட்டது. மாருக அங்கு தனிநாடு கோரிப் போராடுபவர்களை ஒடுக்குவதற்கு தான் ஆயுதங்களை வழங்குவதாக எவ்வித உறுதியும் அளிக்கவில்லை'' என்றும் அவர் தெரிவித்தார்.

## ஏழாம் ஆண்டு வகுப்புகள்:

# 52 ஆரம்ப பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சு அங்கீகாரம்

(ஐ. சண்முகலிங்கம்)

யாழ். மாவட்டத்திலுள்ள இருபத்தைந்து ஆரம்ப பாடசாலைகள் அடுத்த ஆண்டு (1986) முதல் ஏழாம் ஆண்டு வகுப்புகளை (6ந்தரம்) நடத்துவதற்குக் கல்விஅமைச்சு அங்கீகாரம் அளித்துள்ளது.

தற்போது 5ம் வகுப்புமட்டும் உள்ள ஆரம்ப பாடசாலைகளே இவ்வாறு அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளாகும்.

சாவகச்சேரி கல்வி வட்டாரத்திலும், பருத்தித்துறைக் கல்வி வட்டாரத்திலுமே இவ்வாறு அங்கீகாரம் பெற்ற பாடசாலைகள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பப் பாடசாலைகளாகவிருக்கும் ஏராளமான பாடசாலைகள் தமது பாடசாலைகளில் 7ம் ஆண்டு வகுப்பை [6ந்தரம்] நடாத்துவதற்கு கல்வி அமைச்சிடம் அனுமதி கேட்டிருந்த போதிலும் கல்வி அமைச்சு செயலாளர் யாழ் மாவட்டத்திலுள்ள இருபத்தைந்து பாடசாலைகளுக்கே அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

தளபாட வசதியின்மை, கட்டிட வசதியின்மை, ஆசிரியர் பற்றுக்குறை, மாணவர் எண்ணிக்கைஎன்பன வற்றைக் கருத்தில் கொண்டு விண்ணப்பித்த பல பாடசாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

7-ம் ஆண்டு வகுப்பை 1986 ஜனவரி முதல் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்ட பாடசாலைகள் விபரம் பின்வருமாறு:

**சாவகச்சேரி**

**கல்வி வட்டாரம்**

மிருசுவில் றே. க. பாடசாலை, எழுது மட்டுதாள் அ. த. பாடசாலை, கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம், நுணுவில் கிழக்கு அமிர்தாம்பிகா வித்தியாலயம், வரணி சைவப் பிரகாச வித்தியாலயம், குடமியன் த. க. பாடசாலை, மந்துவில் றே. க. பாடசாலை.

**பருத்தித்துறை**

**கல்வி வட்டாரம்**

தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் த.க.பாடசாலை, ஆளியவளை சி.சி. பாடசாலை, கோட்டைக்காடு றே.க. பாடசாலை, தாளையடி றே. க. பாடசாலை, வெற்றிலைக்கேணி றே. க. பாடசாலை, மருதங்கேணி இந்து த. க. பாடசாலை.

**மானிப்பாய்**

**கல்வி வட்டாரம்**

கந்தரோடை கந்தையா த. க. பாடசாலை.

**யாழ்ப்பாணம்**

**கல்வி வட்டாரம்**

சென் றேக்ஸ் றே. க. பாடசாலை, பாரதி பாஷியா வித்தியாலயம்.

**நல்லூர்**

**கல்வி வட்டாரம்**

கலட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, கேண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம், இளையதம்பி இந்து த.க. பாடசாலை.

**உடுப்பிட்டி**

**கல்வி வட்டாரம்**

கொற்றுவத்தை அ.மி.பாடசாலை, சரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், செருடாவில் இந்துத.க.பாடசாலை, கரவெட்டி கிழக்கு அ. த. க. பாடசாலை.

**கோப்பாய்**

**கல்வி வட்டாரம்**

கோப்பாம் நாவலர் இந்து த.க. பாடசாலை.

புங்குடுதீவு கொத்தணி அமைப்பின் கீழ் உள்ள புங்குடுதீவு றே. க. பாடசாலை.

[ஐ]

### மணிவாக்கு

பொது ஊழியத்தில் ஈடுபடுபவன்தான் நிச்சயமாகத் தெரிந்துகொள்ளாத விடயத்தைப் பிறர் நம்பும்படி செய்வது சத்தியத்துக்கு ஊறுசெய்வதாகும்.

— மகாத்மாகாந்தி

## நமது நோக்கு

# ஐம்பது வருட இடதுசாரி அரசியல்

தலையிலிருந்து உதிரம் ஊற்றெடுக்க, அதனை அறியாத வாய் நெருப்பைக் கக்கும் பேச்சில் தொடர்ந்தது. இது சுமார் 50 வருடங்களுக்கு முன், யாழ்நகர் சுப்பிரமணியம் பூங்கா மத்தியில் அன்றிருந்த ஆலமரத்தின் கீழ் நடந்த காட்சி.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் அதன் ஆதரவாளர்களையும் தும்புபறக்கக் கண்டித்துக் கேட்போர் காதையும் கருத்தையும் ஈர்க்கும்வகையில் பிலிப் குணவர்த்தன நிகழ்த்திய பேச்சின்போக்கு அது.

1935 தொடக்கம் 1970ல் ஆட்சிக்குவந்த சிறிமாவோவின் கூட்டணி ஆட்சி வரைக்கும் இடதுசாரித் தலைவர்கள் - சமசமாஜ, கம்யூனிஸ்ட் தலைவர்கள் நடத்திய யாழ்ப்பாணம் முற்றவெளிக் கூட்டங்களை நினைவுகூர்ந்தால் வடக்கில் இடதுசாரிக் கொள்கைகள் செல்வாக்குப் பெற்றிருந்தமை புரியமுடியும்.

இதனை நினைவுகூர்வது இன்று போராடும் தமிழ் இளைஞர்களுக்குப் பலனளிக்கும்.

நாட்டுக்குப் பூரண சுதந்திரம் கிடைப்பதே முக்கியமானது; பிரிட்டிஷ் ஆட்சியின் ஆணிவேரை அறுப்பதற்கு மக்கள் புரட்சியைவிட வேறு வழியில்லை என்று பேசிய முதல் அரசியற் கட்சி லங்கா சமசமாஜக் கட்சி.

பிலிப், என்.எம்., கொல்வின் என்ற மும்மூர்த்திகள் லங்கா சமசமாஜத்திலும், பீற்றர் கெனமன் சீ. பி.யிலும் எழுந்தருளும் யாழ்ப்பாணக் கூட்டங்கள் ஒவ்வொன்றும் பெருவிழாவாகும்.

யாழ்ப்பாண மக்கள்முன் ஜீ.ஜீயிலும், பின் எஸ். ஜே. வி.யிலும் பெருநம்பிக்கை கொண்டபோதும், இடதுசாரி அரசியல் நாட்டின் பிரச்னைகளுக்கு ஒரு முற்போக்கான தீர்வை ஏற்படுத்துமென்ற சிந்தனையாளர் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்தது.

1970-1977 சிறிமாவோவின் கூட்டணி ஆட்சியில் அங்கம் வகித்த எல். எஸ். எஸ். பீயும் சீ.பியும் அந்த ஆட்சி குலையுமுன்னரே தமிழர் மத்தியில் மட்டுமல்ல, நாட்டிலும் செல்வாக்கை இழந்தனர்.

தமிழுக்கு சம அந்தஸ்து என்று மிகத் துணிவாக வாதாடிவந்த இடதுசாரி கட்சிகள், தெற்கில் அது எடுப்படாதென்பதை அறிந்து தமிழரைக் கைவிட்டனர். சோஷலிச கொள்கையின் பெயரில் சிறிமா கூட்டணி ஆட்சியில் எடுத்த சில தீவிர நடவடிக்கைகள் சிங்களப் பொது மக்களுக்குப் பீதி ஏற்படுத்தினதென்பது ஒருபுறம்; மறுபுறம் கட்சிக்குள் வளர்ந்து வந்த போட்டி இடதுசாரித் தலைவர்களை வெளியேற்றியது; அம்மையார் ஆட்சியும் முடிவடைந்தது.

இன்றைய தமிழ்ப் போராளிகள் பலருக்கு இந்தப் பின்னணி புரியாதிருக்கலாம்.

இதனை நாம் மீட்பதில் முக்கிய நோக்கம் ஒன்று உண்டு. எந்த அரசியல் கட்சியும் ஆட்சி அதிகாரத்தில் வேட்கை கொண்டிருப்பது இயற்கை.

இன்று அந்த அதிகாரம் இழந்த நிலையில் 50 வருட இடதுசாரி அரசியல் செல்லாக்காசு என்று நினைப்பவர் அரசியலின் ஆழத்தையும் மனித விவகாரங்களின் நிலையாமையையும் உணராதவர்களே.

தமிழர் பிரச்னையின் இன்றைய நிலை அன்று அவ்வித வலுப்பெற்றிருக்கவில்லை. நாட்டை முழுமையாகக் கணிக்கும் சித்தாந்தமே இடதுசாரி மூலக் கொள்கைகளில் ஒன்று.

இன்று தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்தி நடத்தும் போராட்டம், வெறும் பரிகாசம் அல்ல என்பதை மூதறிஞராக வாழும் இடதுசாரித் தலைவர் கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா திட்டவட்டமாக கூறியிருக்கிறார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா நடத்திய நிருபர் மகாநாட்டில் பொறுமை இழந்த மக்கள் கொல்வின் நடத்திய மகாநாட்டின் கருத்தை நன்றாக ஆதரிப்பர் என்பதில் ஐயமில்லை.

ஒருகாலம் லங்கா சமசமாஜத்தின் 'கட்டாக்காலி'யாகவிருந்த காலி எம். பி. இன்று வெளியிட்ட கருத்தை அரசியல் முதிர்வில் ஆதரிக்கும் கொல்வின், நியாயம் விளங்கும் சிங்கள மக்களின் சிந்தைக்கு ஒரு திருப்பத்தை உண்டாக்க முயல்கிறார்.

தமிழர் பக்கத்திலும் கட்டுப்பாட்டை நினைவூட்டும் வகையில், இளைஞருக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் ஒத்த கருத்தே இன்றைய தமிழ் மக்களின் கருத்தென்றவகையில் தீர்வு காண இந்தவேளை நல்லது என்கிறார்.

இந்தத் தருணத்தை அரசு கைவிடுவது அரசியல் ஆபத்தில் முடியுமென்றும் சரியாக எச்சரித்திருக்கிறார். ஐம்பது வருட அனுபவம் நாட்டுக்கு நல்லதையே கூறுகிறது.

அரசாங்கமும் தமிழ் மக்களும் எதிர் நியாயங்களைக் கொண்டு கலாநிதி கொல்வின் தமிழர் சுயாட்சிக்கு எழுப்பிய குரலை நிராகரிப்பது நியாயமாகாது.

# தமிழ்ப்பகுதிகளின் சுகாதார அபிவிருத்திக்கு பணியாற்றியவர்

## பிரதேச சுகாதாரப் பணிப்பாளருக்கு புகழாரம்

[பண்டத்தரிப்பு]

''யாழ். சுகாதார திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள் அடுத்தடுத்து கடத்தப்பட்டபோதிலும், அலுவலகத்தில் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டபோதிலும், மருந்துவகைகள் கொள்ளை அடிக்கப்பட்ட போதிலும் யாழ். சுகாதார - வைத்திய சேவைகள் பாதிக்கப்படாத வகையில் ஏற்ற மாற்றுஒழுங்குகளை டாக்டர் மாணிக்கம் மேற்கொண்டுவந்துள்ளதை எவரும் மறந்துவிடமுடியாது. யாழ்.பிரதேச சுகாதார-வைத்திய சேவைகளை மேம்படுத்த அவர் ஆற்றிவந்த தூய பணிகள் என்றும் எமது நெஞ்சத்தில் நிலைத்துநிற்கும்.''

இவ்வாறு யாழ். பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளராக ஐந்து ஆண்டுகள் கடமையாற்றி வவனியாவுக்கு இடமாற்றத்தில் சென்றுள்ள டாக்டர் கே. மாணிக்கத்திற்கு யாழ். சுகாதார திணைக்கள ஊழியர்களினால் நடாத்தப்பட்ட சேவைநலம் பாராட்டு விழாவுக்கு தலைமைவகித்து உரையாற்றுகையில் யாழ். சுகாதார திணைக்கள பிரதம கணக்காளர் திரு. சி. எக்ஸ். ஞானசேகரம் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சிப் பாடசாலை மண்டபத்தில் கடந்த 14ம் திகதி சனிக்கிழமையன்று நடைபெற்ற இவ்விழாவில் யாழ். பிரதேச சுகாதாரப் பணிப்பாளர் அலுவலக நிர்வாக அதிகாரி திரு. பொ. இராசேந்திரம் தமது பாராட்டுரையில் ''உலக சுகாதார ஸ்தாபனத்தில் பல முக்கிய உயர் பதவிகளை சுகாதார அமைச்சு வழங்க முன்வந்தபோதிலும் டாக்டர் மாணிக்கம் அவற்றை விரும்பாது தமிழ் பகுதிகளின் சுகாதார அபிவிருத்திக்கு சேவையாற்றுவதையே தமது இலட்சியமாகக்கொண்டு திகழ்ந்தார் என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்க மருந்து கலவையாளர் சங்க யாழ். கிளையின் செயலாளர் திரு. நா. மா. கந்தசாமி உரையாற்றுகையில் இப்பகுதியிலுள்ள சங்க உறுப்பினர்களின் நலன்கருதி தமது சங்கம் சமர்ப்பித்த கோரிக்கைகளை மிகவும் நல்லெண்ணத்துடன் பரிசீலனை செய்து குறைபாடுகளை நீக்க நடவடிக்கை மேற் கொண்டவர் டாக்டர் மாணிக்கம் என்றும் அவரது ஆலோசனைகளை என்றும் மறக்கமுடியாது என்றும் குறிப்பிட்டார்.

யாழ். தொற்று நோய்த் தடுப்பு அதிகாரி டாக்டர் சி. விஜயராசா உரையாற்றுகையில் யாழ், சுகாதார சேவைகளை மிகவும் நெருக்கடிமிக்க பதட்டமான காலசுட்டத்திலும் தளர்வடையாது தொடர்ந்து நடாத்த டாக்டர் மாணிக்கம் பாடுபட்டு வந்தவர் என்றார். யாழ். சுகாதார சேவைப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம். ஜெகநாதன், யாழ் மாவட்ட பதிவு பெற்ற வைத்திய டாக்டர் எஸ். சிவராமலிங்கம், ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய அதிகாரி செல்வி லலிதாம்பிகை கதிர்காமநாதன் ஆகியோர் உட்படமற்றும் பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

பாராட்டுப் பத்திரம் கோப்பாய் அரசினர் வைத்திசாலை வைத்திய அதிகாரி திருமதி கோபாலரத்தினத்தால் வாசித்து கையளிக்கப்பட்டது.

டாக்டர் மாணிக்கம் தமது பதிலுரையில் தமது சடமைகளை சிறப்பாக ஆற்றுவதற்கு சக அதிகாரிகளினதும் ஊழியர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும்தான் காரணம் என்றும் இதற்காக அனைவருக்கும்நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார். அவருக்கு அன்பளிப்பும் வழங்கப்பட்டது. இறுதியில் யாழ். சுகாதாரக்கல்வி அதிகாரி திரு. கா. வைத்தீஸ்வரன் நன்றியுரைவழங்கினார்.

## மக்கள் கருத்து

### கண்காணிப்புக் குழுவின் கிளிநொச்சி விஜயம்

சென்ற 7ம் திகதி சனிக்கிழமை அரசினால் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக்குழு கிளிநொச்சிக்கு வந்திருந்தது அப்போது பலர் சாட்சியமளிக்க முன் வந்த போதும் முடியாது போயிற்று. இருந்த போதும் கிளிநொச்சிச் சந்தை, பெற்றோலியக்கூட்டுத்தாபனம் கிளிநொச்சி ஆகிய இடங்கட்கும் அவர்கள் சமூகமளித்திருந்தனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கண்காணிப்புக் குழு விஜயம் செய்த போது அங்குள்ள ஊழியர்கள் சிலரின் உதவியோடு 23 - 9 - 85 அன்று கிளிநொச்சி பொலிஸ் நிலையம் தீவிரவாதிகளால் தாக்கப்பட்ட போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட சேதங்களும் முக்கியமாக அவற்றின் கட்டிடங்கட்கும் கண்ணாடிக்கதவு யன்னல் போன்ற வற்றிற்கும் டாங்கிகட்கும் ஏற்பட்ட சிதைவுகளையும் அங்குள்ள தொழிலாளர்களினது குறைபாடுகளையும் கேட்டறிந்தனர்.

மேலும் ஆயுதப்படையினர் அடிக்கடி நடத்து பயிற்சியின் போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கட்டிடத்திலுள்ள கண்ணாடிகள் பரீட்சார்த்தமாக வெடிக்க வைக்கும் குண்டுகளினாலும் சேதம் அடைகின்றன. என்பதை அங்கே நின்ற ஊழியர்கள் எடுத்துக்காட்டத்தவறவில்லை.

எச். ஐ. றேசஸ்
பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,கிளிநொச்சி

### விஷயதானம் அனுப்புவோர் கவனிக்க

'ஈழநாடு' பத்திரிகைக்கு விஷயதானங்கள் அனுப்புவோர் கவனத்துக்கு:

தாளின் ஒரே பக்கத்தில் சுருக்கமாக எழுதுக, விஷயங்கள் யாவும் தமிழிலேயே எழுதப்படல் வேண்டும். விஷயங்களைத் திரும்பப் பெறவிரும்புவோர் போதிய தபால் தலையுடன் சொந்த முகவரிஇட்ட கடித உறையையும் அனுப்பிவைக்கவும்.

-ஆ-ர்-

## பொலிஸ் வாகனத்தில் திருட்டு

### 3 ஊர்காவல் படையினர் கைது!

[கொழும்பு]

கோகுவலைப் பொலிஸ்நிலைய வளவுக்குள் நின்ற பொலிஸ் வாகனம்ஒன்றிலிருந்து 'கஸட்' ரேடியோ மற்றும் சில கண்ணாடிகளைகளவாடியது தொடர்பாக மூன்று ஊர்காவல் படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டபோது களவாடப்பட்ட பொருட்கள் இவர்களிடம் இருந்தனவாம்!

## அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு "தமிழ்தீவிரவாத இளைஞர்கள் ஐக்கியப்படவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''இன்று இலங்கை மக்களின் பிரதான எதிரி யு.என்.பி. அரசு ஆகும். குறிப்பாக தமிழ் மக்களின் முக்கிய எதிரியும் அதுவேயாகும். எனவே தமிழ்த்தீவிரவாத இளைஞர்கள் தமது பொது எதிரியான இவ்வரசுக்கு எதிராக பொதுக் கொள்கையின்கீழ் ஐக்கியப்படவேண்டும். அவ்வாறு ஐக்கியப்படுவதன்மூலம் மட்டுமே இன்று முன்னேற்றமின்றி இருக்கும் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தை முன் எடுத்து வெற்றிக்குக்கொண்டு செல்லமுடியும்.''

அண்மையில் நெல்லியடி சனசமூகநிலைய முன்றலில் நடைபெற்ற 'இன்றைய அரசியல் சூழ்நிலையில் நாம் செய்ய வேண்டியது என்ன' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையில் திரு. எம். ஏ. சி. இக்பால் தெரிவித்தார்.

திரு. கே. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் இக்பால் தொடர்ந்து பேசுகையில் ''பொது எதிரிக்கெதிராக பொதுக்கொள்கையின்கீழ் ஐக்கியப்படும் தீவிரவாதஇயக்கத்கங்கள் தம்மத்தியில் ஒரு கூட்டுத்தலைமையை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு இயக்தினர்களும் தம் போராளிகளை அக்கூட்டுத்தலைமைக்கு கீழ்படியச்செய்யவேண்டும். சகல செயல்பாடுகளுக்கும் கூட்டுத்தலைமையே திட்டமிடவேண்டும். அத்தலைமையே சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருந்து வழி காட்டவேண்டும். இவ்வாறான சரியான நிலைமைகள் ஏற்பட்டால் மக்கள் போராட்டத்தில் நம்பிக்கையுடன் பங்கு பற்றுவார்கள்.

''யு. என். பி. அரசு இந்த நாட்டில் வாழும் அடுத்த சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்களின் பிரதான எதிரியாகும். எனவே அம்மக்களையும் இவ்விடுதலைப் போராட்டத்தில் இணைக்கவேண்டும். குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி அவர்களது கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து அவர்களது நியாயமான கோரிக்கைகள் வழங்கப்படுமென உறுதியளித்து அவர்களை ஐக்கியப்படுத்த வேண்டும்.

இந்த நாட்டில் பெரிய இனமான சிங்கள மக்களின் பிரதான எதிரியும் யு. என். பி. தான். இதை இன்று பெருந்தொகையான சிங்கள் மக்கள் உணர்ந்துவருகிறார்கள். இந்நிலையில் அங்கு வளர்ந்துவரும் யு. என். பி. எதிர்ப்பு முற்போக்கு மக்களையும் இவ்விடுதலைப் போராட்டத்தில் இணைக்கவேண்டும்,' என்றார்.

## சுட்டுத்தள்ளுவோம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு பொன்னாலைச் சந்தியை வந்தடைந்ததாகவும், அப்போது அங்கு நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இருல் வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாகவும், சேனாதிராசா கூறினார்.

ஒரு வ.பி.போ.ச. பஸ்ஸிலும், மினிபஸ்ஸிலும் சீருடையினர் வந்து சந்தியில் இறங்கி சரமாரியாகச் சுட்டபோது, தான் மினி பஸ்ஸிற்குள் படுத்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அப்போது அந்த மினி பஸ்ஸில் ஒரு பிரயாணிமட்டும் இருந்தாகவும், அவருக்குக் காயம் ஏற்படவில்லை என்றும் கூறினார்.

சந்தியில் நின்றமக்களும், அயல் விடுகளில் உள்ள மக்களும் சுமார் 4 மணி நேரம் சந்தியில் துப்பாக்கி முனையில் நிற்க வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மூன்றுமணி நேரத்திற்கு மேலாக காயங்களிலிருந்து இரத்தம் வழிந்தோட மினிஸ்ஸிற்குள் படுத்திருந்ததாகவும், சீருடையினர் சென்ற பின்னர் மற்றும் காயக்காரர்களுடன் தானும் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கூறினார்.

தா மினி பஸ்ஸிற்குள் காயத்துடன் விழுந்து கிடந்த போது சீருடை யணிந்த ஒருவர் பஸ்ஸிற்கு அருகில் நின்று ''கொட்டியாவிற்கு உதவி செய்யும் உங்களை சுட்டுத்தள்ளுவோம்', என்று சிங்களத்தில் கூறியதாகவும், சிங்களம் தெரிந்த தனக்கு அதுகேட்டதாகவும் சொன்னார்.

### மற்றுமொருவர் கூறுகிறார்.

பொன்னாலையைச் சேர்ந்த நவரத்தினம், [25 வயது] சம்பவதினம் தொழில் செய்வதற்காக பொன்னாலைச் சந்திக்கு வந்ததாகவும்' அப்போது வ. பி. போ. ச. பஸ்ஸில் வந்திறங்கிய சீருடையினர்சுட்டபோது தனக்கு காயம் ஏற்பட்டதாகவும், தெல்லிப்பளை ஆஸ்பத்திக்குச் சென்று அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்ததாகவும் கூறினார். இவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது;

பவளராசா என்பவருக்கும் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. காலில் இருந்து நான்கு குண்டுகள் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மயக்க நிலையில் இருந்த இவர் நேற்றுப்பேசக் கூடியநிலையில் இருந்தார். காயமடைந்தமற்றும் இருவரும் மயக்கமுற்ற நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (க)

---


## கடைசி நேர வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

திருநாவுக்கரசு மாணிக்கவாசகர் குருக்கள் மயிலிட்டி தெற்கு, மயிலிட்டி என்ற விலாசத்தை உடைய எனது அடையாள அட்டை யாழ்ப்பாணத்திற்கும் குரும்பசிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்க. [2480

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள சுத்திகரிப்புத் தொழிலாளர்களது வெற்றிடங்களை நிரப்புவதற்கு 18க்கும் 40க்கும் இடைப்பட்ட வயதுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித்தகைமைகள்இல்லை. ஆனால் எழுத வாசிக்கத் தெரிந்திருந்தல் வேண்டும். விரும்புவோர் 25-12-85 முன் பதிவுத் தபால் மூலம் சுகாதார சேவைகள் பிராந்திய கண்காணிப்பாளர், யாழ்ப்பாணத்திற்கு விண்ணப்பிக்கவும். நேர்முகப் பரீட்சை 27-12-85 காலை 8-30 மணிக்கு நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு கீழ்வரும் ஆவணங்களுடன் சமூகமளிக்கவும்.

(1) தேசிய அடையாள அட்டை

(2) பிறப்புச் சான்றிதழ்

நேர்முகப் பரீட்சைக்குக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டா.

டாக்டர் ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய கண்காணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.
(2481)

**உஷாமினி**
10-30, 2-30, 4-45, 6-45
AMMERICAN WARRIOR
தனி ஒரு அமெரிகக இராணுவவீரனது துணிகரமான மோதல்கள், ஹெலிகாப்டரையே தகர்த்து எறியும் புதிய நவீன துப்பாக்கி.

**எம்பயர்**
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30
மோகன் - நளினி
**24 மணி நேரம்**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 4-30, 6-30
விஜயன் - சத்தியக்கலா நடித்த
**தனி மரம்**

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
சிவகுமார்-பிரமிளா நடித்த
பாலச்சந்தரின்
**அரங்கேற்றம்**
25-ந் திகதி முதல்
**நான் பாடும் பாடல்**


## இனப் பிரச்னை...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்னை சம்பந்தமான உயர்மட்டப் பேச்சுக்களில், கடந்த இருமாதங்களாக இழுபறிநிலை நீடித்து வருவது தெரிந்ததே.

கடைசியாக, தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்திய வெளியுறவுச்செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி மூலமாக இலங்கை அரசுக்குச் சமர்ப்பித்திருந்த அறிக்கையில் சில மாற்று யோசனைகளைத் தெரிவித்திருந்தது.

ஆனாலும், இந்த யோசனைகள் சம்பந்தமாக இலங்கை அரசு நேற்றுவரை எதுவிதக் கருத்தும் வெளியிடவில்லை.

இனப்பிரச்னை சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் பற்றி தகவல் வெளியிட்ட 'நம்பகமான வட்டாரங்கள்' உத்தேச பேச்சுவார்த்தை சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அழைப்பு விடுத்திருக்கும் அரசாங்கம்; கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம், முன்னாள் திருகோணமலை எம்.பி திரு. ஆர். சம்பந்தன் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிவித்தன.

---

## கரையோரப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

''புத்தளம், சிலாபம் பகுதிகளில் வாழும் மக்களுக்கு விசேட அறிவித்தல்'' என்று தலைப்பிட்டு விநியோகிக்கப்பட்டுள்ள மேற்படி பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''இப்படியான முயற்சிகளை தவிர்த்துக் கொள்வதற்கும், சட்டத்தையும், சமாதானத்தையும் நிலைநாட்டவும் தேவையான சகல நடவடிக்கைகளையும் பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளதுடன், இது தொடர்பாகத் தேவைப்படும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

''எப்படி எனினும், ஏதாவது ஒரு சந்தேகத்துக்கு இடமான செய்கைகளைக் கண்டாலோ, அல்லது இப்பகுதிகளில் பயங்கரவாதிகள் தொடர்பான ஏதாவது ஒரு தகவல் கிடைக்கப் பெற்றாலோ அதுகுறித்து அண்மையில் இருக்கும் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கொடுத்து அரச அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவருமாறு பொதுமக்கள் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்'' (ய-பி)

---

## யாழ். ஆஸ்பத்திரி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

[75 வயது] கனகசபை [62 வயது], வ. அப்பாத்துரை [55 வயது] ஆகியோரே அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

சுழிபுரத்தைச் சேர்ந்த பொ.கிளி [45 வயது] என்பருக்கு முகத்தில் துப்பாக்கிச் சூடு பட்டிருந்ததாகவும், அவரை இதுவரை கண்டுபிடிக்கமுடியவில்லை என்றும் அவரது மைத்துனரான காயமடைந்த அப்பாத்துரை என்பவர் தெரிவிக்கிறார்.

மேற்குறிப்பிட்ட காயமடைந்த மூவரும் தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற பின்னர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். [க.மா]


## மரண அறிவித்தல்

### செல்வன் துரைசிங்கம் கேதீஸ்வரச்செல்வம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த துரைசிங்கம் கேதீஸ்வரச்செல்வம் அகாலமரணமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சிவசம்பு விதானையாரின் பேரனும், துரைசிங்கம் (முன்னாள் கிராமசேவையாளர் சுன்னாகம்), விசாலாட்சி (உதவி ஆசிரியை இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மகனும், செல்வி பங்கயச்செல்வி (ஆசிரியை மட்டக்களப்பு வீச்சுக்கல்முனை - புனித அன்னம்மாள் வித்தியாலயம்), சிவநேசச்செல்வன் (பிரான்ஸ்), தவச்செல்வி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 19- 12- 85 வியாழக்கிழமை (இன்று) இணுவில் மேற்கில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூவோடை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

(2475) தகவல்: சி. துரைசிங்கம்,


## சனத்தொகை...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

காணிகள் இருக்கின்றன. இந்தக் காணிகளை மாவட்டங்களின் தற்போதைய சனத்தொகை அடிப்படையில் அரசு பகிர்ந்தளிக்க இணக்கம் தெரிவித்திருப்பதாக அறிகிறேன். இந்த முடிவு பாரதூரமான விளைவையே ஏற்படுத்தும்.

இலங்கையில் அபிவிருத்தி செய்யப்படாத சனநெரிசல் குறைந்த காணிகள் வடக்கிலும்- கிழக்கிலும் உள்ளன. மன்னார், முல்லைத்தீவு, வவுனியா போன்றமாவட்டங்களில் உண்டு'' என்று கூறிய திரு. தினேஷ் குணவர்த்தன;

''சர்வதேச ரீதியில் நடைபெறும் மாநாடுகளில் தேசிய இனவிகிதாசார அடிப்படையில் காணிகளைப் பங்கிடுவதற்குப் பதிலாக மாவட்ட இனவிகிதாசார அடிப்படையில் காணிகளைப் பங்கிட முடிவு செய்துள்ளதாக அறிகிறேன். இது சம்பந்தமாக அமைச்சர் சபையில் பதிலளிக்க வேண்டும். ஏனெனில் இந்த நாட்டின் எதிர்காலம் சம்பந்தமாக இந்தத் தீர்மானம் பாரிய விளைவை ஏற்படுத்தும்.'' என்று குறிப்பிட்டார். (பி)

---

## ''கொத்மலை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களவர்கள் 20வீதம் குறைந்துள்ளனர். சிங்களவரின் பாரம்பரிய பிரதேசமான கொத்மலையில் சிங்களவர்கள் சிறுபான்மையராகவுள்ளனர்'' என்று தெரிவித்தார். [ய-பி]

## தமிழ் அகதிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாந்து அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளைக்கொண்ட குழுவொன்று நாளை மறுதினம் (21ம் தி தி) வடபகுதிக்கு விஜயம் செய்யவுள்ளது.

சர்வதேச இயக்கத்தின் பிரதிநிதிகளுடன் வரவிருக்கும் இந்த அதிகாரிகள் குழு, வவனியாவிலுள்ள அகதிகள் முகாமுக்கு முதலில் விஜயம் செய்யவுள்ளது. (மா)

---

## ஓட்டுசுட்டான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

இப்பகுதியில் சென்று கொண்டிருந்த ஜீப் வண்டியைக் கண்ட ஹெலிகொப்டர் தாளப்பறந்து துரத்திச் சென்றதும், ஜீப் வண்டியில் இருந்த மூவர் ஓரிடரிடத்தில் ஜீப் வண்டியை நிறுத்தி வைத்துவிட்டு அதிலிருந்து ஓடத் தொடங்கினராம்.

இதனைத் தொடர்ந்து ஹெலிகொப்டர் அவர்களைத் துரந்திச் செல்லவே, அவர்கள் ஹெலிகொப்டரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தலைமறைவாகிவிட்டனராம். ஹெலிகொப்டரிலிருந்து புறப்பட்ட துப்பாக்கி வேட்டுகள் வயோதிபமாது ஒருவரைப்பலி கொண்டதாகக் கூறப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட ஆயுதப்படையினர் இயந்திரத்துப்பாக்கியின் உதிரிப்பாகத்தையும், மருந்துவகை உடுபிடவைகள், 'ஈ பி. ஆர். எல், எவ் துண்டுப்பிரசுரங்கள் கொண்ட இருபைகளைக் கண்டெடுத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)


## RADIO AND ELECTRONIC ENGINFERING COURSE (6 Months)

O/L பரீட்சைக்குத் தோற்றியவர்கள் வானொலி, T. V. முதலியவற்றில் பயிற்சிபெற்று தொழில்வாய்ப்புகளை இலகுவில் பெறுவதற்கு ஓர் அரியசந்தர்ப்பம்.
Fees: Rs. 1000/- (மாதம் 200/- வீதம் செலுத்தலாம்)

**ஆரம்பம்: 21-12-1985**

விரிவுரையாளர்: E. கணபதிப்பிள்ளை

**CANTABIA Institute**

21, MAIN STREET, JAFFNA. T. Phone: 24201.



## 31ம் நாள் நினைவஞ்சலி

### S. பரமநாதன் (C. A S)

(இளைப்பாறிய உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி)

தோற்றம்: 18 -- 03 -- 1915



மறைவு: 19 -- 11 -- 1985

அன்னாரது மரணச்சடங்கில் கலந்துகொண்டு உதவிய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் 19-12-1985 இன்று நடைபெறும் 31ம் நாள் கிரியையில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்புடன் நினைவு கூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

81, நக்கா வீதி, யாழ்ப்பாணம்.
2492

# இன்றைய பலன்

மாதம்:- மார்கழி
திகதி:- 4 [1985-12-19]
கிழமை:- வியாழன்
திதி:- அட்டமி
பின் இரவுவரை
நக்ஷத்திரம்:- பூரட்டாதி
மு. ப. வரை

மேடம்:- ஒளிமயமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள்.

இடபம்:- தூக்கம் விழிகளை தழுவமறுக்கும். கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். அடுத்துக் கொடுப்பதற்கு சிலர் முனைவர்.

மிதுனம்:- மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக்கவருவீர்கள். பயன் தரும் பிரயாண மொன்றும் மேற்கொள்ளப்படலாம். அறவழி நாட்டமுண்டு.

கடகம்:- தெளிந்த மனம் தெய்வசிந்தை தேடியதுகிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வுமுண்டு.

சிங்கம்:- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். இன்று அதிகபேச்சைத் தவிர்க்கவும். வரவிலும்தடையுண்டு.

கன்னி:- குடும்பத்தில் அமைதி நிலவும். களஸ்திர வழியால் நன்மைகள் வந்து சேரும். நீண்டநாள் கனவு இன்று நனவாகும்.

துலாம்:- விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையலாம். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும். இன்றுசும்மா இருப்பதே சுகம்.

விருட்சிகம்:- குடும்பவாழ்க்கை இன்றி சமமாக இருக் இருக்கும். தூரத்து உறவினர் ஒருவ உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார்கள். பயன் உள்ள தொடர்புகளும் பெருகும்.

தனுசு:- வெற்றிப் பாதையில் வீறுநடைபோடுவீர்கள். தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு.

மகரம்:- வெளியூரிலிருந்து திருப்திகரமாண செய்தியும் கிடைக்கும். கடமையில் ஆர்வம் பிறக்கும். டாச்டர்களுக்குச் செல்வாக்குப் பெருகும்.

கும்பம்:- இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும். காதல்கணை தாக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும்.

மீனம்:- எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். எதிர்பார்த்த முடிவகளில் ஏமாற்றம் உருவாகலாம். உடல்நலமும் பாதிக்கப்படும்.

**திருமலை வே. ரவீந்திரன்**


● இத்தாலி
● பிரான்ஸ்
● மேற்கு ஜெர்மனி

ஆகிய நாடுகளுக்கு
உங்களை எமது பிரதிநிதி December
26-ம் திகதி அழைத்துச் செல்வார்
மற்றும்
பாஸ்போட், பொண்ட், விசா
என்பனவற்றுக்கு தொடர்பு கொள்ளவும்:

லிப்ருஸ் லிமிட்டெட்

R. G. கட்டிடம்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

60, Sea Beach Road,
Pettah.
T. P. 29148.


## பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

வட்டுகோட்டை இந்துச் கல்லூரி ஆசிரியர் திரு. ஆ. சதாசிவம் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றதையிட்டு பிரிவுபசார விழாவொன்று அண்மையில் கல்லூரியில் நடைல்பெற்றது.

இவ்விழாவில் இவரின் ஆசிரிய சேவையைப்பாராட்டி ஆசிரியைகள் திருமதி சுப்பிரமணியம் திருமதி ஞா.முத்துலிங்கம் ஆசிரியர்கள் திரு.வ. யோகானந்தசிவம், திரு. வி. கந்தசாமி திரு. இராமானந்தசிவம் ஆகியோர் பேசினர். இவ்விழாவுக்கு வடமாநில கல்விப்பணிப்பாளரும் கலந்து கொண்டார்.

# இப்படியும் நடக்கிறது

நெலும் மல் என்றால் என்ன?

தமிழ் மொழி மட்டும் தெரிந்தவர்கள், தலையைச் சொறிய வேண்டியதுதான்! விஷயத்துக்குக்கு வருவோம்.

அண்மையில் நடைபெற்ற க. பொ. த. சித்திர பாடம் முதலாம் பகுதி விஞத்தாளில் உள்ள இரண்டு விஞக்களிலும் இடம் பெற்ற கலைச்சொற்கள் யாவும் பரீட்சார்த்திகளுக்கு தலைச்சுற்றை ஏற்படுத்தியிருந்ததாம்!

விஞக்களில் தாமரைப் பூ என்று தமிழில் தரப்படாமல் 'நெலும் மல்'' என்றும், இது போன்ற பிற சொற்களும் காணப்பட்டன! இதே நிலைதான் சமூகக்கல்வி பாடத்திலும்!

பரீட்சார்த்திகளுக்கு 'மயக்கம்' ஏற்பட்டதற்குக் காரணம்; பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவியாளர்களுக்குக் கூட அந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியவில்லையாம்.

அடிக்குறிப்பு:- தாமரைப் பூவுக்கு, சிங்களத்தில் கூறுவது 'நெலும் மல்'

''ஊடுருவி',

## கோவளத்து கோமகன்



கல்விமான்கள் நிறைந்த கற்கோவளம் கிராமத்தில் பிறந்த அருளானந்தம் சிறு பராயத்திலேயே பாடசாலைக் கல்வியுடன் வைத்தியத்தையும் கற்றுத் தெளிந்தார். தமது 19 வது வயதில் கோலையில் ஆசிரியர் பணியினை ஆரம்பித்த இவர் 1940 ம் ஆண்டு முதல் கற்கோவளம் மெ. மி. த. க பாடசாலைக்கு மாற்றம் பெற்று மாணவர்களின் நல்லாசிரியராகவும், நோயாளிகளின் வைத்தியராகவும் சேவை செய்தார். இவரிடம் பேச்சு வன்மை இசை வன்மை ஆளுமை ஆகியன காணப்பட்டன.

கருணை உள்ளத்தின் இலக்கணமாக கண்டத்துக்குமேற்பட்ட வைத்தியத்தில் தலைசிறந்த வைத்தியரென இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து தன்னை நாடி வரும் கஷ்டமுறும் கடுமையான நோயாளர்களுக்கு குழாய்நீர், மலகூடம் உட்பட சகல வசதிகளும் கொண்ட வாட் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார் அமரர் அருளானந்தம். சண்ணியம் மிக்கவர்களின் ஒருவராக விளங்கி அகில இலங்கை ஆயுள் வேத வைத்திய சங்கத்தில் யாழ் பிரதேச செயலாளர் ஆக இரண்டு வருடமும், தலைவராக ஒருவருடமும், யாழ்ஆயுள்வேத கல்லூரி விரிவுரையாளராக ஒருவருடமும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

கடமை வீரராகிய அமரர் அருளானந்தம் அவர்கள் தந்தையும் தாய்- மாமனையும் தான் பிறந்த நாட்டையும் ஒன்றாக நேசித்தமையால் அம் மூன்றுக்கும் முதலான ''க'' வே கதியென கொண்டார். அதனால் கல்விச்சிறப்பு கடவுள் பக்தி கருணையுள்ளம் கண்ணியமான சேவை கருதியது முடிக்கும் ஆற்றல் கட்டுப்பாடு அத்தனையும் தன் உள்ளத்தில் சுடர் விட்டு பிரகாசிக்க செய்தார். தனது கடமையின் இறுதிப் படியாக கற்கோவளம் என்னும் நாமம் இலங்கையில் மட்டும் என்ன இங்கிலாந்திலும் ஒலிக்க வேண்டும் என்னும் வேணவாவினால் தானே லண்டன் மாநகர் சென்று உலகிலே தலைசிறந்த விஞ்ஞானிகளும் மெய்ஞானிகளும் அரசரும் அறிஞர்களும் தோன்றி மறைந்த புண்ணிய பூமியிலே ஆசிரியரும் டாக்டரும் ஆகிய அருளானந்தம் 8 - 11 - 85 அமரராகி பெருவாழ்வு பெற்றுவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

**-ஏரம்பு இராசநாயகம்**

## ஜி. சி. ஈ. (உயர்) கொக்குவில் 'இந்து' முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆகஸ்ட் 85ல் நடந்த ஜி. சி. ஈ. (உயர்தரம்) பரீட்சையில் கூடுதல் புள்ளிகள் பெற்ற மாணவர்கள் வருமாறு;

விஞ்ஞானம்: எஸ். கேதீஸ்வரி-2 பி, சி. எஸ்; ஆர். இலங்கேஸ்வரி- : 3சி. எஸ்.

கணிதம்: கே. நல்லநாதன்- ஏ, பி, 2சி.

வர்த்தகம்: பி. ஜெயக்குமார்- 2 பி, 2 சி; ஜி. வசீகரன்- 2 பி, 2சி; ரி. விஜயகுமார்- பி, 3 சி.

கலை: எம். புவனேஸ்வரி- ஏ, பி, சி, எஸ்.

## ரோந்து நடவடிக்கை

(வவனியா)

கிளிநொச்சிக்கும் மாங்குளத்துக்கு மிடையில் ஆயுதப்படையினர் ரோந்து நடவடிக்கையில் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்ததால், போக்குவரத்துச் சேவைகள் பலமணி நேரம் தடைபட்டிருந்தது. குறிப்பிட்ட பகுதிகளில் வீதித்தடைகள் போடப்பட்ட பின்னரே ஆயுதப்படையினர் சோதனை நடாத்தினர்.

(மா)

## மூவர் கைது

(வவனியா)

மினிவான் சாரதியான பிரபாகரன், அவரது சகோதரர் செல்வபிரகாஷ், வாடகைக் கார் சாரதி கணேஷ் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட வாடகைக் கார் சாரதியான சந்திரா என்பவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

(ய.மா)




## 7 வீரர் போட்டியில் சென். மேரிஸ் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் நடைபெற்று வந்த 7-வீரர்கள் பங்குபற்றும், உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் சழகம் 'பி' பிரிவில் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படிச் சுற்றுப் போட்டியில், 'ஏ' பிரிவில் கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகம் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### '9-வீரர்கள்' போட்டி

யாழ். உதைபந்தாட்ட லீக் 'தலைவர்' வெற்றிக் கிண்ணத்துக்கான, தமது அடுத்த போட்டியை மிகவிரைவில் ஆரம்பிக்க விருக்கின்றது. இப்போட்டி முறை, இலங்கையில் எந்த ஒரு விளையாட்டுச் சங்கமும் நடாத்தாத போட்டியாக அமையவிருக்கிறது. இப்போட்டியில் மெத்தம் 'ஒன்பது வீரர்கள்' மட்டுமே பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள். 'நொக்கவுட்' முறையில் நடாத்தப்பட இருக்கும் இப்போட்டியில், 11 வீரர்கள் டங்குபற்றும் போது கடைப்பிடிக்கும் விதிமுறைகள் பின்பற்றப்படுமென, மேற்படி லீக்கின், போட்டிக் குழுச செயலாளர் திரு. அ. தேவராசா தெரிவித்தார்.

இப்போட்டி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் புதிய விளையாட்டரங்கில் நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மிக துரிதமாக நடைபெறுவதாக தெரியவருகிறது. (வி)

## சாவகச்சேரி சமாதான மலை சரிந்தது

அன்பர்கள் அனைவராலும் ''வைத்திலிங்கம்'' எனஅழைக்கப்படும், சாவகச்சேரி வடக்கு அதிபர் குமாரசாமி சங்கரப்பிள்ளை அவர்கள் பல தசாப்தங்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலைக்கு நிரந்தர அதிபராகச் சேவை புரிந்தவர். விழாக்களை மாத்திரமன்றி காரியங்களை நன்கு நிருவகிப்பவர். இவர் இன்று அங்கு கல்வி பயிலும் சுமார் 2500 மாணவர்களின் வரலாற்றை மாத்திரமன்றி அவர்களின் பெற்ருரின் சரித்திரத்தையே நன்கறிந்தவர். இவர் திட்டமிட்டு, ஒல்லும் வகையாலெல்லாம் கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்.

உள்ளூர் கலை, கலாசார விழாக்களில் முன்னின்றுழைப்பதனுல் சிறந்த நிருவாகப் பொறுப்புக்கள் பல இவரை வந்தடைந்தன.

காலத்திற்குக் காலம் மாறி வரும் அதிபர்களுக்கு தனது ஒத்துழைப்பை வழங்கி சாவகச்சேரி ''இந்து''வை தலைசிறந்த ஒரு கல்லூரியாக மிளிரவைத்தார்.

சாவகச்சேரி ''இந்து''வின் வளர்ச்சியே தென்மராட்சியின் உயர்வுக்கு உயிர்நாடி என நம்பிய இவ்வதிபர் பற்பல சாதனைகளை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் புரிந்து, அதனை இன்று அகில இலங்கை அந்தஸ்துப்பெற்ற முதற்தர கல்லூரியாக மிளிரவைத்தார்.

இவ்வுத்தம அதிபர் தம்பணியில் இருந்து ஒய்வு பெற்று இன்னும் ஒருவருடமாகவில்லை. சாவகச்சேரி நீதிமன்று எரியூட்டப்பட்டு நீதி விசாரணைகள் ஸ்தம்பிதமடைந்து அராஜரீகம் தலையெடுத்தது,

துடித்தெழுந்த அமரர் சங்கரப்பிள்ளை சாவகச்சேரி வடக்கில் ஒரு இணக்க சபையை முறைப்படி நிறுவி, அதன் தலைவராகப் பதவியேற்று நீதி பரிபாலனம் செய்தார்.

பிரதி ஞாயிறு தோறும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பெரிய மண்டபம் பிரபல நீதிமன்றமாக மாறிவிடும். இவர் ஒரு சாதனை வீரர்.

இச்சமாதான சபையின் தீர்ப்பை ஊர் மக்கள் மாத்திரமன்றி, நீதிமன்றமும், கணித்து மதித்து வந்ததை நாடறியும்.

தரமான இசைஞானம் கைவரப்பட்டமையால் - சாவகச்சேரிக் கலைஞர்கள், சேவையாளர்களை - வரிசையறிந்து இவர் பகிரங்கக் கூட்டங்களில் பொன்னுடை போர்த்து பொற்கிளி வழங்கி கௌரவித்து ஊக்கப்படுத்தி வந்துள்ளார், இவர் மகா சதுரர்.

இவரால் நாடு மேலும் நயம் பெறக் காத்துநின்ற வேளையிலே 9-12-85 இரவு திடீர் என ஏற்பட்ட சுகவீனத்துடன் இப்பூவுலக வாழ்வை ஒருவி ஈஸ்வரனின் திருவடிகளை நண்ணினுர்.

தன்வாழ்வை பொதுச் சேவைக்கு அர்ப்பணித்த ஒரு சாதனை வீரனின் இறுதிநினைவு வைபவங்களிற் கலந்து எமது அஞ்சலியைத் தெரிவிப்போமாக! ஓம் சாந்தி!!

— ஆர். ரி. எஸ்.

## மக்கள் மதிப்பை பெற்றவர்

பிரபலஆசிரியரும், அகாயக்குளத்துப்பிள்ளையார் கோவில் ஆவரம்பிட்டி அம்பாள் ஆலயம் ஆகியவற்றின் பரிபாலகருமான அராலியைச் சேர்ந்த ஏ. வி. சுப்பிரமணியம் அவர்கள் அண்மையில் இறைவனடி எய்திய செய்தி கேட்டு அனைவரும் அதிர்ச்சியும் துக்கமும் அடைந்தனர். அன்னரிடமிருந்த எளிமை, தாழ்மை, இறைபக்தி, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத குணம் என்டன மக்களை அவர்பால் மதிப்புக்கொள்ள வைத்தன.

அன்னரின் இளமைப்பருவம் சோதனை மிகுந்ததாகவே இருந்தது. சிறு பராயத்திலேயே அன்னையை இழந்து தந்தையைப் பிரிந்து வாழ வேண்டிய சோதனை பின்னர் தந்தையாரின் முதுமையடைந்த பெற்ருேர்களை அவரே பராமரிக்க வேண்டிய பொறுப்பும் வந்தது.

அவர் தனது உயர்கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியில் பெற்ருர் கல்லூரி நூல் நிலையத்தைப் பயன்படுத்தி தமது அறிவை வளர்த்தார்.

மறைந்த தலைவர் ஜவகர்லால் நேரு, இலங்கை இடதுசாரித்தலைவர்களான என். எம். பெரேரா, பீற்றர் கெனமன் போன்ருேரின் சொற்சுவை நிறைந்த சொற்பொழிவுகளை விரும்பி கேட்பார். ஜி. ஜி., எஸ். ஜே. வி. ஆகியோரின் தியாகமும். அரசியல், பணிகளும் அவரை மிகவும் கவர்ந்தன. தமது நூலகத்தில் இவர்கள்பற்றிய புத்தகங்களை வைத்து யாரும் எடுத்து வாசிக்குமாறு கூறியிருந்தார்.

அன்னர் சைவக்கோயில்கள் உறைவிடம் என்ற கருத்துடையவர். பிரபல்யம் பெற்ற இசைமேதைகளை அழைத்து இசைமாரி பொழியச் செய்து மக்களை மெய்மறக்கச் செய்தார் அண்ணல் காந்தியின் அகிம்சா தத்துவத்தில் அசையா நம்பிக்கை கொண்ட அவர் ஆலயங்களில் மிருகப் பலிநடைபெறுவதை வன்மையாக எதிர்த்தார் இதனைத் தடுக்க உள்ளூர் வைதீக மக்களின் எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாமல் அவர் செயலாற்றினுர்.

பிறர்க்கு சேவை செய்வதையே உயிர் மூச்சாகக் கொண்ட அவர் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமை ஆற்றி செய்த சேவைகளை மக்கள் அறிவர் தமது காலத்தில் வாணி விலாசசபையை நிறுவ உதவினுர்.

அன்னர் தமது இறுதிக்காலத்தில் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகளையும், எல்லாம் வல்ல இறைவனின் திருவிளையாடல்களையும் பற்றியே பேசுவார்.

அன்னரின் ஆன்மா பரமேஸ்வரனின் திருஷ்டியை சேர்ந்து சாந்தியுடன் இருக்கும் வண்ணம் இறைவனை பிரார்த்திக்கிருேம்.

எம். சிவசுப்பிரமணியம்.


### மலிவு விற்பனை

தரமான உடுபிடவைகளையும் Ford Suitcase வகைகளையும் தேர்ந்தெடுத்து வரும் பண்டிகைக்காலத்தை சிறப்பாக ஒருபடி முன்னேற்றத்துடன் கொண்டாடுங்கள். மலிவு விலையில் உடுபிடவைகளைப்பெற:

லேடன் இன்டஸ்ரியஸ் தயாரிப்புகளைப்பெற இன்றே விரையுங்கள்:

**லேடன் காமன்ஸ் லிமிட்டெட்,**

86, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(2485) தொலைபேசி: 22330


## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

### க. அன்ரன் ஜோச் (றஜனி)



பிறப்பு: 26-06-1960

இறப்பு: 19-12-1983

போராடப்போயிருந்து புலியாகி வீழ்ந்திருந்தால் மாரடித்து ஒய்ந்தபின்னுல் மனமடங்கிப்போயிருக்கும்.

நீராடச்சென்ற மகன் நெடுங்கட்டையானுன் என நெஞ்சுணரும் போதிலெல்லாம் நினைவு தடுமாறுதையோ.

ஈராண்டு சென்ருலும் இளையமுகம் மறக்கலயே, ஈன்ற வயிறுதனில் இடிமுழக்கம் கேட்குதடா. வாரமலர் வந்துதித்த வடிவழகே வான் மழையே நீராகச் சொரிவதெல்லாம் நிம்மதிதான் எமக்கு எங்கே.

இல. 48, டேவிட் ரோட்,
யாழ்ப்பாணம். (2467)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி செல்லாச்சி பொன்னையா

மலர்வு: 19-08-1905 உதிர்வு: 19-11-1985

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் சுடர்விட்டு அணைந்துவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே! அன்புள்ளம் கொண்டு அனைவரையும் அணைத்திடும் எங்கள் பேரின்பக் கடலே! நீர் அணைந்தாயோ; எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் எம்மைவிட்டு மாருது, மறையாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

எமக்கு சகல வழிகளிலும் பேருதவி செய்த அயலவர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பி ஆறுதலளித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்ருேம்:

பிரிவால் துயருறும்

மக்கள், மருமக்கள், சகோதரர்,
மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்ருர், [உறவினர்கள்.

141/3, முரசுமோட்டை, பரந்தன். (2426)


# அணில் ஐஸ்கிறீம் அருந்தி நத்தாரைக் கொண்டாடுங்கள்



Vanilla, Strawberry, Chocolate,
Available in CUPS,
FAMILY BLOCKS,
PLASTIC PACKS and
GALLONS

யாழ்ப்பாணத்தின்
முதன்மையான உற்பத்தி.
நியாய விலையில் கிடைக்கிறது.
(ரூ. 3/50 முதற்கொண்டு)

Dyn Ads




Special orders accepted.

Marketed by:

**dyn ads marketing,**

476, பிரதான வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

பின்வரும் விற்பனையாளர்களிடம் பெறலாம்:

யாழ்நகர்: லக்கி ட்ரேடர்ஸ் (தட்டா தெரு), ஜெயரட்ணம் ஸ்ரோர்ஸ் (நாவலர் வீதி), பமிலி சொப் (நாவலர் வீதி), பாலாஜி ட்ரேடர்ஸ் (மணிக்கூட்டு வீதி), ரவீந்திரா ஸ்ரோர்ஸ் (பிரதான வீதி), பெமிலி காடின்ஸ் (சின்னக் கடை).

சுண்டுக்குளி: CHERRYLS, ANIETHAA.

திருநெல்வேலி: SUPERB RANK.

சுன்னுகம்: SHOBA.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

போதைப் பொருள் கடத்தல்

# ஆஸி. வாசிகள் இருவர் மரணதண்டனை மலேஸிய உயர்நீதிமன்றம் ஊர்ஜிதம்!

## மன்னிப்பு வழங்குமாறு ஆஸி. அரசு கோரும்

[லண்டன்]

போதைப்பொருள் கடத்தல் சம்பவத்தில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அவுஸ்திரேலிய கடத்தல்காரர்கள் இருவரினதும் மேன்முறையீடு மனுக்களை மலேசிய உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இதே வேளை இந்தக் கடத்தல்காரர்களுக்கு மன்னிப்பு வழங்குமாறு மலேசிய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளப்போவதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்திள்ளது.

அவுஸ்திரேலியாவைசேர்ந்த இந்த இருகடத்தல்காராகளும் 1983 ம் ஆண்டு சுமார் 180 கிராம் ஹிரோயினைக் கடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபொழுது கைது செய்யப்பட்டார்கள்.

1975ம் ஆண்டுக்குப் பின்னர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 32 பேருக்கு மலேசிய உயர்நீதிமன்றம் மரண தண்டனை நிறைவேற்றியுள்ளதுடன் தற்போது இதே குற்றத்திற்காக 59 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 17 பேர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களென்றும் கூறப்பட்டது. (ரா)

## சாரதி, கிளினருக்கு வாள் வெட்டு

[வவனியா]

மன்னாரைச் சேர்ந்த லொறி ஒன்று ஆயுதம் தாங்கிய குண்டர் கோஷ்டியினால் வழிமறிக்கப்பட்டு அதன் சாரதியும் கிளினரும் கடுமையாகத்தாக்கப்பட்டதுடன் அவர்களிடமிருந்த 15ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் சூறையாடப்பட்டுள்ளது.

இப்பயங்கர கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட கோஷ்டியினரில் ஒருவரை அப்பகுதி மக்கள் பிடித்துப் பொலிசில் ஒப்படைத்துள்ளனர்.

வவனியாவிலுள்ள மூன்றுமுறிப்பில் இக்கொள்ளைச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. கொழும்பிலிருந்து வந்த லொறியே தாக்குதலுக்குள்ளானது

லொறிச் சாரதியான சிற்றம்பலம் சிவஞானசுந்தரம் [26வயது], லொறிகிளினரான கந்தன் கணபதி (23 வயது) ஆகிய இருவருமே வாள் வெட்டுக் கிலக்கானவர்கள். படுகாயமடைந்த இருவரும் வவனியா ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டனர்.

இக்கொள்ளைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அப்பகுதி சிங்கள மக்கள் நிமால் என்பவரைப்பிடித்து பொலிசில் ஒப்படைத்துள்ளனர். மற்றவர்கள்தேடப்பட்டுவருகின்றனர்.

## ஓய்வூதிய திகதிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி, கச்சேரி கிளையில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்குரிய டிசம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதியம் எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளான சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கோட்டை கொடுப்பனவுக் காரியாலயத்தில்வைத்து வழங்கப்படும்.

21-ம் திகதி சனிக்கிழமை:- சிவில் ஓய்வூதயம் பெறுவோர் சகலருக்கும்.

22-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை:- விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம், ஆசிரியர் ஆசிரிய விதவைகள், படைக்கல சேவிதர்கள், படைக்கல சேவிதர்களின் விதவைகள் ஆகிய மற்றையோருக்கான ஓய்வூதியமும் வழங்கப்படும்.

இக் கொடுப்பனவுகள் காலை 9-00மணியிலிருந்து பிற்பகல் 1-00மணிவரை செய்யப்படும்.

## இன்று தேனிசை மழை

(கரவெட்டி)

கலை கலாசார மன்றத்தினர் இன்று வியாழக்கிழமை இரவு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் 'தேனிசை மழை' நிகழ்ச்சியை நடாத்தவுள்ளது.

மதுரகானம், பாட்டுக்குப் பாட்டு, மாணவருக்கான பொதுக்கேள்வி உட்பட பல நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. நிகழ்ச்சித் தொகுப்பாளராக முன்னாள் இலங்கை வானொலி அறிவிப்பாளர் திரு. கே. எஸ். ராஜா கடமையாற்றவுள்ளார். (மா)

## தமிழ் மொழி வளர்ச்சிக்கழகம்

[யாழ்ப்பாணம்]

தமிழ் மொழியை அழியாது காக்கவும், தமிழை பிழை இல்லாது கற்கவும் வட்டுக்கோட்டைத் தொகுதியில் 'தமிழ் மொழி வளர்ச்சிக் கழகம்' ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது- இதன் பெயர் தமிழ் மொழி பாதுகாப்பு இயக்கம் என்று முன்னர் தெளிவந்த செய்தி தவறானதாகும்.

# ஹெலிகொப்டரிலிருந்து சூடு: கடற்றொழிலாளி பலி!

(பண்டத்தரிப்பு)

மாரீசன்கூடல் பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் ஆயுதப்படையினர் ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கடற்றொழிலாளி ஒருவர் பலியானார்.

தம்பிராசா இராசா (42 வயது) என்பவரே பலியானவராவார்.

சம்பவதினம் மாரீசன்கூடல் பகுதியில் இராணுவத்தினர் வீதி வழியாக வந்ததாகவும், அப்போது அப்பகுதி மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்த போது இறந்தவரும்ஓடியதாகவும் அச்சமயம் ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் அவர் இறந்தாராம்.

இறந்தவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

## ஒருவர் கைது ஒருவர் தப்பினர்

(மன்னர்)

மன்னார் - வவனியா வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவர்மீது ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர், ஒருவர் தப்பி ஓடினார், மற்றவர் காயங்களுடன் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை நெலுக்குளம் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

மினிவானொன்றில் ரோந்து சென்ற ஆயுதப்படையினரே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ய-மா)

# அபிவிருத்திச் சபைகளுக்கு அடுத்த வருடம் தேர்தல்

[கொழும்பு]

நாடெங்கிலுமுள்ள அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல்கள் அடுத்த வருட நடுப்பகுதிக்குள் நடத்தப்படவேண்டும் என்று பிரதமமந்திரி தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இக்கருத்தை வெளியிடுகையில, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கான அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் பதவிகளை ராஜினாமாச்செய்ததனால், அரசாங்கம் அப்பகுதிமக்களின் நன்மை கருதி சபைகளுக்குரிய அதிகாரங்களை மாவட்டச் செயலாளர்களுக்கு அளித்தது என்றார்,

தற்போதுள்ள சபைகளின் நிர்வாகக் காலம் கடந்த ஜூனில் முடிவுற்றது. எனினும் பிரதம மந்திரி அபிவிருத்திச் சபை விதிகளைப் டயன்படுத்தி அவற்றின் நிர்வாகக் காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு - அதாவது 1986 ஜூன்வரை நீடித்திருந்தார். ஆயினும் இவ்விதிகள் நிர்வாக காலத்தை ஒரு வருடத்துக்கு மேல் நீடிக்க வகைசெய்யவில்லையாதலால் அடுத்த ஜூனில் தேர்தல்களை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இப்போதுள்ள சபைகளுக்கான தேர்தல்கள் 81ம் ஆண்டு ஜூனில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி நடந்தது குறிப்பிடத்தக்சது.

# சிங்களப் பெண்ணுக்கு இரங்கிய தமிழ் டாக்டர்

[கொழும்பு]

சவூதியில் வேலைபார்க்கும் இலங்கை தமிழ் டாக்டர் ஒருவர், அங்கு வேலை பார்க்கும் சிங்களப் பெண்மணிக்காக தமது விடுமுறையை தியாகம் செய்த சம்பவம் அண்மையில் நடந்துள்ளது.

மேரி மார்கிரட் எனும் கம்பஹாவை சேர்ந்த இச் சிங்களப் பெண், சவூதியில் பணிப்பெண்ணாக வேலை செய்து வந்தார். சிறிது காலத்துக்கு இவர் நோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் அங்கு அவர் மயக்கநிலையில் பல மாதங்களாக நினைவற்று இருந்தார்.

இவரது நிலைகண்டு அனுதாபமுற்ற இவரின் எஜமானர் இவரை இலங்கைக்கு அனுப்ப விரும்பினாலும் மருத்துவர்கள் நோயாளியை துணையின்றி அனுப்ப மறுத்துவிட்டதால், அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்நிலையில் இவரின் நிலைபற்றி கேள்விப்பட்ட டாக்டர் சிவகுமாரன், விடுமுறையைக் கழிக்க ஊருக்குச் செல்ல வாங்கியிருந்த விமான டிக்கட்டை இலங்கைக்கு மாற்றி எடுத்து திருமதி மார்கிரெட்டை அழைத்துவந்தார்.

டாக்டரின் இச்செயல் அங்குள்ள மக்களை மிகவும் மகிழ்ச்குள்ளாக்கியுள்ளது.

## ரூபவாஹினி

மாலை
5-00 செய்திகள்
5-05 கார்ட்டூன்
5-30 சார்ட்டூன் (சிங்களம்)
6-00 விலங்கு இராச்சியம்
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 கிறிஸ்மஸ் இசை நிகழ்ச்சி
7-25 'அண்டுன' (சிங்களம்)
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 தொலைக்காட்சி- நாடகம்
9-00 செய்திகள் (அங்கிலம்)
9-30 உலகச் சிறுவர் விவரணச் சித்திரம்
9-45 நடன மஞ்சரி (தமிழ்)
10-10 உலக யுத்தம் அங்கம் - 12
11-05 ஒளிபரப்பு முடிவு

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.

## மரண அறிவித்தல்

### வேலாயுதம் மாரிமுத்து ஆசாரி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முரசுமோட்டையில் வசிப்பவருமாகிய வேலாயுதம் மாரிமுத்து ஆசாரி காலமானார். இவர் நாகமுத்துவின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, மனோலட்சுமியின் பாசத் தந்தையும், திருநாவுக்கரசு தியாகராஜாவின் மாமனாரும், தமிழ்ச்செல்வி, கலைச்செல்வன், அன்பழகன், சந்திரகுமார், வாணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் முரசுமோட்டை மயானத்தில் 19-12-85 இன்று மாலை நடைபெறும்.

[2493]

## மரண அறிவித்தல்

### திரு. கந்தையா செல்லையா

நயினாதீவு 8ம் வட்டாரம் கந்தையா செல்லையா காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற திலகவதியின் அன்புக் கணவரும், பிரகாசபாக்கியம்மாவின் அன்புத் தந்தையும், தவநாயகபதி அவர்களின் மாமனாரும், யெசமாறனின் பேரனும் ஆவார். ஈமக்கிரியைகள் 19-12-85 வியாழக்கிழமை (இன்று) 4 மணிக்கு நயினாதீவில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தவநாயகபதி (மருமகள்)

(2491)

## மரண அறிவித்தல்

### வேலாயுதபிள்ளை ஸ்ரீகாந்தன்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன் (Aero-Nautical Engineer Delhi) காலமானார். இவர் S.P வேலாயுதபிள்ளை [J.P] செல்வரத்தினம் தம்பதிகளின் அன்புமகனும், ஸ்ரீரதி, ஸ்ரீகுமாரன் Irrigation Office Kaluvanchikudy), சூரியகுமாரன், ஸ்ரீகௌரி [K.K கனேந்திரன் Co), ஸ்ரீபாலன், ஸ்ரீவாணி, ஸ்ரீலலிதா, தேவகி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-12-85 வியாழக் கிழமை (இன்று] காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரிவீதி,
புதுக்கோவிலடி,
கொக்குவில்.

[2489]

## மரண அறிவித்தல்

### சண்முகம் கருணரட்னம்

உரும்பிராயைச் சேர்ந்த சண்முகம் கருணரட்னம் காலமானார். அன்னார் இ. போ ச (வேரகரா) உதவி பிரதம கணக்காளரும் (காலஞ் சென்ற இருபாலையைச் சேர்ந்த) C. A சண்முகம் திருமதி செல்லம்மா சண்முகம்ஆகியோரின் அன்பு மகனும் ஜோதிமலரின் அன்புக் கணவரும், நிருபா, நிகிலா, நீற்றா, நிரு ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி புவனேஸ்வரி, நவரட்ணராஜா, திருமதி மகேஸ்வரி ஆனந்தகுமாரசாமி, திருமதி கனகேஸ்வரி தருமரட்ணம், திருமதி ராஜேஸ்வரி சுவாமிநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் (காலஞ்சென்ற) V. சீவரட்ணம், திருமதி பராசக்தி சீவரட்ணம் ஆகியோரின் மருமகனும், திருமதி சிவசக்தி கணேசு, S. மகேந்திரன், S. விஜந்திரன், S. ராஜேந்திரன் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 19- 12- 85 வியாழக்கிழமை (இன்று) பி. ப 3-00 மணியளவில் உரும்பிராய் தெற்கில் நடைபெறும்.

தகவல்: திருமதி ஜோதிமலர்,
உரும்பிராய் தெற்கு.
உரும்பிராய்.

(2473)